ஸ்ரீராமஜயம்.

முகவை,

இயற்றமிழாசிரியராகிய

இராமாநுசகவிராயர்

பச்சையப்பவள்ளன்மீது

புதுவதாப்புனைந்த - பஞ்சரத்நமாலிகை

யுங்காண்டிகையுரை.

1848.

இது,

ஜெ. யாரது அச்சுக்கூடத்திற் பதிப்பித்தது.

௲௮௱௪௰௮-ஏப்பிரல்மீ

பொருப்பாயிரம்

(கட்டளைக்கலித்துறை.)

ெ பூத்தவுந்தித்திருமாலடியவர்தேசிகர்தா *
ேளர்பூத்தநன்மலர்நீரினருச்சித்திறைஞ்சியெ
[ன்று *
மோர்பூத்ததாரினெஞ் சென்னியெல்லாம் பு
[னைந்தாக்குகிற்பாம் *
ார்பூத்தவின்பமும்வான்பூத்தனவுங்கைப்பற்
[றுதற்கே *

ஸ்ரீராமஜயம்.

பஞ்சரத்நமாலிகை.

பாயிரம்.

நவமணிமாலைசொல நாமேநேர்ந்தகாலைத் -
தவவன்பேருநர்சீர்மெய்சார்ந்து - புவனிமி
சை, வாழிக்கப்பஞ்சரத்ந மாலைசொலப் புக்
கோம்யாம்-விழித்துப்பச்சையப்பன்மேல். *

சீர்தெரிந்தநாட்டனைற் சீநிவாசப்பெருமா
ன் - பார்புரந்து பச்சையப்பன் பற்றலர்பா-
லேர்சிறந்தா, னிங்கிலாண்டான நகனெல்லையி
ல்பாவாணர்கடம் - பங்கிலாண்டைந்தருவாழ்
பண்பு... ... ... (க)

காத்துப்படைத்தழித்தான் காமர்பொருள
ளப்பால்-பூத்துத்தரித்தரித்தான் பூட்புகழ்மை-
யேத்துபுகழ், மூவராம்பச்சையப்பன் முன்
போன்றியற்பெயரோன் - நாவலர்நீந்தத்தந்தா
னுடைமம்... ... ... (உ)

மருவினிமையின் மையுணர்மால் சீநிவாச
ப் - பொருவில் பேர்புண்டளித்த பொற்பா-
ணாரிமைபெற, நாவலர்க்கெலாமினித்தா றனி
லமேலாமணந்தான் - காவலனாம் பச்சையப்
பனீகாண்........................(௩)

நீர்முறையினெவ்வுயிர்க்கு நேர்ந்துதவிசெ
ய்கையினாற்-பேர்முறையும் பச்சையப்பனாப்
பெற்றா-னோர்முறையிற், பஞ்சையப்பனாமெ
லிந்தான்பங்கயத்தோன்காவலனாய் - மிஞ்சின
ஃகினீரோவிடம்........................(௪)

கரிபரிதேரானுடையாய் காமருவுகையோ
ய்- பொருவில்புகழ்ப்பச்சையப்பபூப - தரிய
லனார், சீர்நூலுலகுமறந்தேச நலமின்பிகழ்
தோஞ்- சேரலாக்கையளாத்தேவை...(௫)

சீர்வாழிபச்சையப்பன் றெய்வத்திறல்வாழி
யூர்வாழி தார்வாழியோங்குபுகழ்- நீர்வாழி; ய
ன்னவன் செய்நல்லறமுமாக்கமொடுபாலிக்கு
மன்னார்முன்பின்வாழிவாழி........................*

பஞ்சரத்நமாலிகைமூலமுற்றிற்று.

ஸ்ரீராமஜயம்.

பஞ்சரத்நமாலிகை.

ஐங்காண்டிகை யுரை.

சிறப்புப்பாயிரம்.

நவமணிமாலைசொல நாநேர்ந்தகாலைத்....*
தவவவன்பேறுநர்சீர்மெய்சார்ந்து-புவனிதினை
வாதிக்கப்பஞ்சரத்ந மாலைசொலப் புக்கோம்
வீதித்துப்பச்சையப்பன்மேல்.....[யாம்.*

உரைப்பாயிரம்.

திருவருளொருவனிற்செங்கதிர்க்கடவுள்,வளைவலந்திரிதருஉமண்டலவரைப்பின், நகரெலாம்புகழ்சென்னை நன்னகரோர்வயிற், புகரின்மாநிதிவளர் பொற்குணக்குன்றம், பாங்கொடுமெய்புணர்பல்கலைவிநோதன், வோங்கடபதியெனும்விரவலர்கோளரி,மூவரையோர் கவிமுறைமுறைசுட்டுமா,நாவலிர்கொல்லெனநயந்தினிதுரைப்பப், புனைந்தனனென்றுடன்பொருந்தவீரிரண்டும், வனைந்தபைந்தூழாயணிமால்கொலோவென்னத்,தெருண்டநூற்புலவருஞ்செல்வருஞ்சிந்தை, மருண்டுநோக்கிறையாமட்டில்பெருமையினன்,பல்கலைப்பான்

மதிபாற்கடலுதித்தெனத், தொல்குலநீர்மை யுந்தோற்றமுஞ்சிறந்தோன், ஒப்பில்சீரணிய ருமுகைமுயருநடுங்கத், தப்பிலாதறம்பசர்சது ர்ப்பாடுடையோன், தற்றோரவையிணைக்காட்சி யினமர்த்தி, மற்றோருரைக்கிடைவழிவிடாவா ய்மையன், அகன்றபல்பொருளெலா மடக்கு சிற்றுடியிற், புகன்றசின்மொழியுமைப்புகுத் துரைசெயவல்லோன், அசுணநன்மாவெனயா வரும்வேட்ப, விசையிசைமாட்சிய வின்னி சைசெவிக்கெனக், கலைவல்லோர் நாப்படகவி ன்மதிபோன்மென, நிலவினன்பல்கலைநீதம் பயில்விநோதன், வாணிவாசத்தல வளவரும்வி ரும்புசீர்ச், சீநிவாசப்பெயர்த்திறல்செழுவே ந்தன், கண்டாங்குவந்தாசண்டிலங்கேட்டிலம் பண்டாங்குவந்தபருணிதர்மொழியுளும், விசி த்திரமிதற்குரைவிரித்தெழுதகவெனவிசைத் தவிஞினிறைவளுமெழுந்சோமசுந்தர, குருவரு ளெக்கெனுங்கோல்கொடுக்கனென், கருதி யதுறைசெயக்கணித்தலிந்நூலுலைமு, இத்தலை வெண்பாவென்னுணர்த்திற்றெனின், நூ லின்றுவராவோதுணர்த்துற்றென்க..........*

(இதன் பொழிப்பு.)

இப்பஞ்சையப்பவள்ளன்மீது யாம் நவம

னிமாலை சொல்ல நினைந்தபோது - அவன்பெ
யரிலிருந்த பச்சையும் அவனூராகிய காஞ்சி
யென்னுமணிமேகலையும் அவன்புகழென்கின்
ற நித்திலங்களும் அவன்சரீரகாந்தியாகிய மர
மணியும் நமதுளத்திற்றோன்றி வாதித்தநிறு
மேல் யந்தநால்வகையிரத்நங்களையுஞ்சேர்த்து
ட்புனைவதுமிகையாயும் விரோதமாயுமிருக்கு
மென்றெண்ணி யவ்விரண்டுமின்றிப்பஞ்சரத்
நமாலிகை சொல்லத்தொடங்கினே மென்ப
து, இங்ஙனங்கூறியதனு லவன்பேரன்பிரூர் ஞி
ரோர்முதலியவும் விளங்கிக்கிடந்தனவெனக்கொ
ள்க. ....*

சிறப்புப்பாயிரவுரைமுற்றிற்று.

சீர்தெரிந்தநாட்டனற் சீநிவாசப்பெருமான்,
பார்புரந்து பச்சையப்பன்பற்றலர்பா - லோர்சி
றந்தா,னீங்கிலாண்டானை நசனெல்லையில்பாவ
ணர்கடம் - பங்கிலாண்டைந்தருவாம்பண்பு. *

இது முக்கூற்றிருக்கைச்செய்யுள் - என்னெ
னின், இச்செய்யுளொன்றுதானே தனித்தனி
மூவர்மேற்றாக்கினென்க. (இ-ள்.) பச்சைய
ப்பன் - பச்சையப்பனென்னுமியற்பெயரினை

புடையவள்ளலானவன், பார்புரந்து - உலகத்
திலுள்ளவுயிர்களையெல்லாமிரட்சித்து, நற்சீ
நிவாசப்பெருமானும் - நன்மைபொருந்திய
இலக்குமிவாசஞ்செய்கின்றமார்பினையுடைய
திருமாலாயிருக்கின்றான், அத்திருமாலுடைய
இரட்சிப்பு அநுமானப்பிரமாணமாகமப்பி
ரமாணங்களாலேவெளிப்படுவதன்றி இவனது
இரட்சிப்புப்போலக்கண்கூடாக யாவர்க்கும்
வெளிப்படாததினாலேயிவனை நற்சீநிவாசனெ
னவேண்டிற்று, சீர்தெரிந்தநாட்டான்- சான்
றோர்களாலே யிதுவே வளம்பொருந்தியதெ
னத்தெரியப்பட்ட காஞ்சிமண்டலத்தையுடை
யவன், பற்றலர்பால்- பகைவரிடத்திலும், ஏர்
சிறந்தான்- (பகைமை-குரோதம் - அச்சமுத
லாயினவின்றித்) தன்னியல்பாகிய வழகுமிக்
குவிளங்கியோன், பாலினுமென்ற இறந்தத
ழுவியஎச்சவும்மைவிகாரத்தாற்றொக்குநின்ற
து, அதினாலே-நட்புப்- புதுமுகமென்றவிர
ண்டிடத்தினுஞ் சிறந்ததன்றியெனக்கூட்டிக்
கொள்க- இவன்பகைஞர் இவனதுகல்வியும்.
ஒழுக்கமுஞ் சான்றாண்மையும் - பொறையு
ம்- வரைவறக்கொடுத்தளிக்கும்வள்ளன்மையு
ம் - தங்களைவிழுங்கியதுடன்றி மேன்றலகத்

தைடம்விழுங்கியபுகழ்ப்பெருக்கமு முதலிய
நற்குணங்களைக்கண்டு வணங்கிச் சரண்புகுத
லாலங்ஙன மேர்சிறந் தானெனக்காண்க. இங்
கில்- (இவ்வகைமாட்சியோன்) இப்போது இ
ந்தஇகலோகத்திலில்லை, இது இல்லையென்ப
து- வினைமாட்சித்தாயினுமில்- என்றூற்போல
க்கடைக்குறைந்துநின்றகுறிப்புமுற்று, ஆண்
டான்- அந்தப்பரலோகத்தையுடையனாயினா
ன், அறகன் - பாவவொழிவையுடையவன், எ
ல்லையில்-அளவில்லாத, பாவாணர்கடம்- ஆரி
ய முதலிய மொழிகளாற்கவியியற்றவல்ல புல
வர்களுடைய, பங்கில் - பாலிலே, ஆண்டைத்
தருவாம்பண்பு- அந்தவானுலகத்துள்ளபஞ்ச
தருக்களையொத்த ஈகையாளனும், எ-று. ஐந்
தருவன்னனும் எனவிரித்துக்கொள்க......*
ஆம் என்பது இறுதிநிலைத்தீவகமாதலால்
முன்பு வேண்டுமிடங்களிற்கூட்டிக்கொள்க, ப
ண்புஎன்பது விசேட்புக்கிளவியாதலால் இன்
னும் விரிக்கவேண்டுமிடங்களில் விரித்துரைத்
துக்கொள்க. என்னை - விசேப்புக்கிளவி வேண்
டியது விளைக்குமென்பதுசூத்திரம், பச்சை
யப்பனவன் - சீநிவாசப்பெருமாளும், சீர்
தெரிந்தநாட்டனும்- ஏர்சிறந்தானும் - இங்கி

ல்லையாம்- ஆண்டானும்- அநகனும் - ஐந்தரு
வாம்- எனத்தனித்தனிமுடித்து, பச்சையப்ப
ன் - ஸ்ரீநிவாசப்பெருமானாகியும், சீர்தெரிந்த
நாட்டனாகியும், ஏர்சிறந்தவனாகியும், இங்கில்
லாதவனாகியும், ஆண்டானாகியும், அநகனாகியு
ம், ஐந்தருவென்னவாகியுமிருக்கின்றானென
வொருமுடிபாக்குக. ஸ்ரீநிவாசப்பெருமான்பா
ர்புரந்து என்பது- ஏது- உருவகவணி, சீர்தெ
ரிந்தநாட்டன்- பற்றலர்பாழ்ஏர்சிறந்தான்-இ
ங்கில்- ஆண்டான்- அநகனென்பன- தன்மை
யணி- ஐந்தருவாமென்பது ஏதுவுவமையணி,
ஆதலாற்கூட்டிநோக்கச் சங்கீரணவணியென்
க, பச்சையப்பனென இடைநின்றமொழிமு
ன்னும் பின்னுஞ்சென்றொட்டிப்பொருள்
கொளநிற்றலாலிச்செய்யுட்பொருள்கோள் -
தாப்பிசையெனக்காண்க. இப்பாட்டுடைத்த
லைவன் பச்சையப்பன், இனியிதனைச்ஸ்ரீநிவாச
வள்ளன்மேலேற்றிக்கூறுதும். ....*

சீர்தெரிந்த - வாம்பண்பு. (இ-ள்.) நற்ஸ்ரீ
நிவாசப்பெருமான் - நன்மையையுடைத்தா
யிருக்கின்றஸ்ரீநிவாசனென்னும்பெயரினை
யுடைய அரையனானவன், சீர்தெரிந்தநாட்ட
ன் - (பகை- புதுமுகம் - நட்பென்கின்றமூன்

திறத்தாருடைய மனப்பண்புகளைப் பார்த்த மாத்திரமே யளந்தறிகின்றகண்களையுடையவன், தெரியுநாட்டனெனற்பாலது- தெளிவுபற்றியிறந்தகாலமாகமயங்கிநின்றது, நுண்ணிய மென்பாரளக்குங்கோல்காணுங் காற்கண்ணையல்லதில்லைபிற, எனக்கூறுதலுங்காண்க, சீநிவாசப்பெருமான் திருமாலாதலாலவனோடிவனிடைவேற்றுமைதோன்ற நற்சீநிவாசப்பெருமானெனப்பட்டது, பார்புரந்துபச்சையப்பன்- உலகத்துயிர்களையெல்லாமிரட்சிப்பதினாலே பச்சையாகியஅப்பனும், பச்சை- திருமால்- பச்சையேமரகதந்தோல் பரிமளப்புதன்மால்புந்தி, என்பதுநிகண்டு - திருமாலாம்பிதாவுமாம் எனினும் அமையும், பற்றலர்பாலோர் - இருவகைப்பற்றுக்களையுமொழிவிட்டவராகியதுறவறத்தாரிடத்தமைந்ததவநிலையமுகினும், சிறந்தோன்- மிக்கோனும், ஏனென்புழியின்னுருபோடும்மைபுந்தொக்குநின்றன, அவரிடத்தமருந்தவநிலையாதலாலந்நிலைப்பொறையினுமிவனிலைப்பொறைமிக்கதென்பதாம், என்னெனின்- பிரமசாரிவானப்பிரஸ்தன் சந்நியாசியென்றமூவகையுமவரவர்நெறிகளிலிடையூறின்றிச்செல்லஉண்டியுமுறையுளுந்தந்

து வழித்துணையாய்நிற்பதுமன்றித் தானுந்த
னில்லறநெறி தவறுதொழுகலாலென்க, இ
வ்வாறொழுகியோனை - ஆற்றினொழுக்கியறனி
ழுக்காவில்வாழ்க்கை - நோற்பாரினோன்மை
யுடைத்து - எனவிங்ஙனங்கூறுதலுங்காண்க.
இங்கிலாண்டான்- இங்கு- இவ்வுலகத்துள், இ
ல் - இல்லறத்தை. ஆண்டான் - அதற்குரியவிய
ல்போடுகூடிக்கடைபோக வாள்கின்றோனும்,
இதுவுந் தெளிவுபற்றிக்காலமயங்கி நின்றது,
ஆள்கின்றோனை- ஆண்டானென்றலின், ஏனைய
வற்றிற்கு முற்கூறியாங்குப் பொருளுரைத்து
க்கொள்க. நற்ஸ்ரீநிவாசப்பெருமான்- சீர்தெரி
ந்தநாட்டனும்- பார்புரந்துபச்சைபட்டனும்
ஏர்சிறந்தானும்- இங்கிலாண்டானும்- அநகனு
ம்- ஐந்தருவாம்- எனத்தனித்தனிமுடித்து அ
வற்றையெல்லாமெச்சமாக்கி மேன்முடித்தா
ங்கு ஒருமுடிபாக்குக, அணியிலக்கணமும்
பொருள்கோளுமேற்கூறியனவேயாமென்க,
இதற்குட்பாட்டுடைத்தலைவன் - ஸ்ரீநிவாசப்புர
வலன், இனி யிதனைநாட்டன் றுறைமேலேற்
றிக்கூறுதும்.......................................*

சீர்தெரிந்த - வாம்பண்பு. (இ-ள்.) சீர்தெ
ரிந்தநாட்டன்- ஒழுக்கம் வழக்குத் தண்டமெ

ண்கின்ற முக்கூற்று நியாயங்களையும், (நியாய சாஸ்திரங்களையும்) நன்றாக ஆராய்ந்தறிந்திருக்கின்ற நாட்டனென்னு மியற்பெயரினையுடைய அனையனுனவன், சீர்-என்றது-இங்கே பண்புகுறித்து நின்றது, செய்திகழற்பெய்குடத்தின்சீரோ- என்றாற்போல, அனையர்க்கு அனையப்பண்பாவது நியாயப்பிரமாண நூல்களையுணர்ந்தொழுகலாதலாலங்ஙனமுரைக்கப்பட்டது, நற்சீநிவாசப்பெருமான் பார்புரந்து - உலகத்தையிரட்சித்தலாலே நலம்பொருந்தியதிருமாலாம், பச்சையப்பன்- திருமாலாகியஅம்மையுடையவனுகிய ஈச்சுரனும், அம்பன் - அப்பனெனவிகாரப்பட்டுநின்றது, பற்றலர்பால்- சத்துருக்களிடத்தில், சத்துருக்களைச்சங்கரிப்பதில் ஈச்சுரனெனத்திருப்பிக்கொள்க; ஏர்சிறந்தான் - மிகுந்தஅழகினையுடையவன்,இங்கிலாண்டான்- இங்கிலாண்டுதேசத்தையுடையவன், ஒழிந்தனவற்றிற்கு மேற்கூறியாங்குப்பொருளுரைத்துக்கொள்க, சீர்தெரிந்த நாட்டன் பார்புரந்து நற்சீநிவாசப்பெருமானும் பற்றலர்பாற்பச்சையப்பனும், ஏர்சிறந்தானும், இங்கிலாண்டானும், அநகனும், ஐந்தருவாமெனத்தலித்தனிமுடித்து அவ

த்துறையெல்லாமெச்சமாக்கி யொருநடி யாக்குக, இதுசிறிதுபிறழ்ந்துசெல்லினும்யாற்று நீர்ப்பொருள்கோளின்பாற்படும்- சங்கிரணமணி, இதற்குப்பாட்டுடைத்தலைவன்- நாட்டன் துரை, இனியிச்செய்யுளுக்குப் பாட்டுடைத்தலைவர் மூவராதலால்- பச்சையப்பன்மேற்செல்லுங்கால்- சீர்தெரிந்தநாட்டன்-காருசிமண்டலத்தான், சீநிவாசப்பெருமான்- திருமால், பச்சையப்பன்- இயற்பெயர், பற்றலர்-பகைஞர், இங்கிலாண்டான்- என்பதைப்பிரித்து - இங்கிலை - ஆண்டான். எனப்பொருளுணர்க, சீநிவாசப்புரவலன்மேற்செல்லுங்கால்-சீர்தெரிந்தநாட்டன்- சீர்தெரிந்தகண்களையுடையவன்- சீநிவாசப்பெருமான்- சீநிவாசனென்னுமியற்பெயரையுடைய அரையன், பச்சையப்பன்- திருமால், பற்றலர்-துறவறத்தார், இங்கிலாண்டானென்பதை- இங்கு- இல் - ஆண்டானெனப்பிரித்து இங்கே யில்லறத்தையாண்டானெனப் பொருளுணர்க, நாட்டன் துரைமேற்செல்லுங்கால்- சீர்தெரிந்த - நீதிநூலுணர்ந்த, நாட்டன் - இயற்பெயர், சீநிவாசப்பெருமான்- திருமால், பச்சையப்பன்- ஈச்சுரன், பற்றலர்- பகைவர்; இங்கிலாண்டான் -

இங்கிலாண்டு தேசத்தையுடையவன், என்னய
வெல்லாமூவர்க்கும்பொதுப்படநின்றனவெ
னக்காண்க.... ... ...(௬)

காத்துப்படைத்தழித்தான் காமர்பொருளை
யப்பால் - பூத்துத்தரித்தரித்தான் பூம்புகழ்
மை-யேத்துபுகழ், மூவராம்பச்சையப்பன்
முன்போன்றியற்பெயரோன் - மூவலர்ந்தத்த
த்தானுமாம்...... ... ...*

(இ-ள்.) பச்சையப்பன் - பச்சையப்பனென
வன், காமர் - அழகிய, பொருள் - பொருளாகி
ய, பொருளைத் - திரவியத்தை, (உயிர்ப்பொ
ருள் உயிரல்பொருளென்னு முலகப்பொரு
ளோடிதனிடை வேறுபாடுணர்தற்குக் காமர்
பொருளெனப்பட்டது,படைத்து - (நல்வினை
நீக்கணின்றுவருந்திமுயன்று)தன்னிடத்துண்
டாகத்தொகுத்து, படைத்தலிங்கே யுண்டாக
ச்செய்தல், பிறப்பித்தலன்று, குன்றத்தனையி
ருநிதியைப்படைத்தோ ரன்றைத்தினமே ய
ழிகினுமழிகுவரென்றற்போல, காத்து - அத
னை நாடோறும் வளருப்படிபோற்றி, அழித்
தானறப்பால் - தருமத்தினிடமாகவேசெல்வ
ழித்தான், அழித்தலிங்கே - செலவுசெய்தல்,

கெடுத்தலன்று, படைத்துக்காத்தழித்தானென
னக்கூட்டுக, (ஆதலால்) ஏத்துபுகழ் - யாவரு
ந்துதிசெயப்பட்டபுகழையுடைய, மூவராம்-
இங்ஙன முத்தொழிலைச்செய்கின்ற மும்மூர்த்
திகளாவன், இது ஏது உருவகவணி, பச்சைய
ப்பன்காமர்பொருள்படைத்துக்காத்து அறப்
பாலழித்தானாதலாலேத்துபுகழ்மூவராம்பின்
எனக்கூட்டுக. பூத்தாத்தரித்தரித்தான் பூம்புக
ழ்மை-பூம்புகழ் - பொலிவுபொருந்திய புக
ழை, பூத்து-பூப்பச்செய்து, தரித்து- அதிலே
தங்கிநின்று, மை-அப்பூம்புகழ்க்குவிரோதமா
யெழுந்தகுற்றத்தை, அரித்தான்- பிறகாரண
ங்களாலே யினியுண்டாகாமலே சங்கரித்தான்,
போன்று- அம்மூவரையுமொத்து, பூம்புகழ்
மை - பூப்புகழ்க்குத்தோன்றியகுற்றம், இவன்
புகழ்பூத்ததுபோல வுந்திபூத்தோன் திருமா
ல், இவனப்புகழிலே தங்கியிருந்ததுபோல அ
ப்பூவிலேதங்கியிருந்தோன்பிரமன், இவனப்
புகழ்க்குவந்தகுற்றத்தைப் பிறகாரணங்களா
லே யரித்ததுபோலத்தேவர்களுடைய செல்
வமெல்லாங் கடலிற்கவிழ்ந்து நிற்கத்தோன்
றிய காலத்திற் பிறகாரணங் க ளா லே யக்
கடலைக்கடைந்து அந்த நிற்கையொழியும்

படிபுகழுமழுதழுதலியனவுந்தோன்றியக்கா
லுடனே யதற்குவிரோதமாகத் தோன்றியகு
ருநிறவிடத்தை யரித்தோன் ஈச்வரன், ஆதலா
ல் முன்மூவனையும் போன்று பின் மூவராமெ
னமுடித்துக்கொள்க. இது ஸ்துவுவமையணி
இவனதுபுகழ்க்குத்தோன்றிய குற்றம்யாதெ
னின், இவனது அளவிறந்தபொருள் வளமெ
லாங்கைப்பற்றிக்கொண்டு இவனதுபுகழ் விள
ங்காமலே மறைத்த இராஜவிக்னமென்றுங்கு
ற்றமாம், இங்குப்பிறகாரணங்களாவன-ஸ்ரீநிவா
சமென்னுந்திருமாலானவன்- நாட்டன்றானா
யாகியமந்தரகிரியை மத்தாக்கி- நியாயப்பிர
மாணத்தைத் தாம்பாக்கிப்பிணித்து இச்செ
ன்னையாநகரிலுள்ளகுடிகளோர்புறமும் பிர
புக்களோர்புறமுமாகநிறுத்து அவனது பொ
ருள்வளங்கவர்ந்த அனையர் குழுவென்னுங்க
டலினைக்கடைவித்து அதிற்றோன்றிய அவன
துபொருள்வளமுழுமையையுங்கைக்கொண்டு
யார்யார்க்கு எந்தெந்தப்பிரகார நியமமோ
அந்தந்தப்பிரகாரம் அவ்வப்பொருள்களை ய
வரவர்பாற்படுத்ததுடனன்றி யுலகமெங்கு மவ
னதுபும்புகழ்பரவும்படி நூதனமான தான
தருமங்களையு மேன்மேலுஞ் செய்துகொண்

டேவரும்படி நேரிட்டது. பச்சையப்பனது நலிதவவுயர்ந்த தவப்பயனுதலா லிவைகளேயாமென்க, இயற்பெயரொன்று (இன்னுங்காரணமின்றி) அவனது இயற்பெயரொருதொடராகக்கூம்பியும், அலர்ந்து - இரண்டாகவிரித்துநின்றும், அத்தத்தானுமாம் - அப்பெயர்ப்பொருளிறைவு பம்மூவராகின்றனென - று. ✻

ஒன்றுவெனாறுதொக்குநின்றசெயவெனெச்சத்தைமுடித்த கூம்பியென்னும் வினையெச்சமும் - அலர்ந்துமென்னு முடிக்குஞ் சொல்லால் முடிக்கப்பட்டிரண்டாகவென்னுஞ் செயவெனச்சமும் அவாய்நிலைவருவித் துரைக்கப்பட்டன, பச்சையப்பன் தனது இயற்பெயர்கூம்பியுமலர்ந்தும் அருத்தத்தானும் மூவராமெனமுடிக்க, கூம்பியொருதொடராய் நின்றதற்கு உதாரணம். பச்சையப்பன். இதன்பொருள் - திருமாலாகிய அம்மையுடையவன் - அவன்யாரெனின் - திரிபுரசங்காரஞ்செய்த முக்கட்கடவுள், அம்பு - அப்பு - என விகாரப்பட்டுநின்றது - அப்புமாரியினிரியப் போக்கினன்றாற்போல், இனியலர்ந்து இருமொழியாய் நின்றதற்குஉதாரணம் பச்சை - இதன்பொருள் - திருமால், அப்பன் - இதன்பொருள் பிரமன் -

வரணபண்மல்லோனிந்த மண்பொதுத்தந்தை
வேதன்-என்பது நிகண்டு, ஆயின் - அப்பன் -
என்பது - பெற்றோருக்கும் பிரமனுக்குமாத
லாற் பொதுப்பெயராயிற்று. அடைகொடுத்
துவிளங்கக்கூறும லப்பனென்றேகூறுதன்மை
யங்கவைத்தலென்னுங்குற்றமன்றோவெனின் -
இம்மைவருமொருவர்க்கொருவரினமாதலால்
இனமாக முன்னின்ற பச்சையென்னுந் திரு
மாலைச்சார்ந்து நிற்றலால் அப்பனென்பது
பிரமனையேவிளக்கி நிற்குமாதலாற் குற்றமன்
றென்க. வினைசார்பினமிடமேவிளங்காப்
பலபொருளொருசொற்பணிப்பர் சிறப்பெடு
த்தே - என்பதிலக்கணமாதலால் - வினையினையு
ஞ்சார்பினையும் இனத்தையுமிடத்தையும்பொ
ருந்திவிளங்காதாயிற் சிறப்படைகொடுத்துக்
கூறவேண்டு மிது இனத்தான் விளங்கிய பல
பொருளொருசொல்லெனக்காண்க. இதுவு
மேதுவுருவகவணி - இச்செய்யுளிருமுடிபாக
முடிந்தது. ஆகவிச்செய்யுண் மூன்றணிகூ
டியவணிசங்கீர்ணம், பிறவிலக்கணங்களுங் க
ண்டுகொள்க - விரிவஞ்சிவிட்டனம் - இதன்கரு
த்துவிளங்கிக்கிடந்தது (௨)

மருவினிமையின் மையுணர்மால் ஸ்ரீநிவாஸ
ப் - பொருவில் பேர்பூண்டளித்த பொற்பா-
னுரிமைபெற, நாவலர்க்கெலாமினித்தானினி
லமேலாமணந்தான் - காவலனும் பச்சையப்
பன்காண். ... ...*

(இ-ள்.) (பச்சையப்பனென்னும்பெயர்க்
கு) மரு-வாசனையும், இனிமை-இனிப்பும், இன்
மை-இல்லாமையை, உணர்-உணர்ந்த, மால்-
திருமாலானவர், (தன்பொருட்டாகவு மநேக
கைங்கிரியங்களைப் பண்ணினவனுதலா லிரக்க
முற்றுச்) ஸ்ரீநிவாஸப்பொருவில்பேர்பூண்டு-ஸ்ரீ
நிவாஸனென்கின்ற ஒப்பற்ற திருநாமத்தைக்
கொண்டவதரித்து, அளித்தபொற்பான்-வாச
னையுமினிப்புமாகிய அவ்விரண்டையுந்தந்து
பாதுகாத்தவளென்மையாலே, பொற்பு-அழ
கு, அதுஇங்கேசைகையையுணர்த்திநின்றது, அ
ளித்தவளியென வேண்டுதலா லெனக்கொள்க,
உரிமைபெற-பச்சையப்பன்-ஸ்ரீநிவாஸனென்ற
இவ்விரண்டுபெயர்க்கும் அர்த்ததாற்பரியசம்
பந்தங்களுண்டாகத்தக்கதாக, காவலனும்ப
ச்சையப்பன் - பச்சையப்பனென்னுமியற்பெ
யரினையுடைய அவையனைவன், நாவலர்க்கெ

ல்லாம்-புலவோர்க்கெல்லாம், இனித்தான்-இனித்திருந்தான், நானிலமெல்லாம்-உலகமெங்கும், மணந்தான்-பரிமளித்தான், எ-று,

காண்-என்பது அசைநிலை யிடைச்சொல், பூண்டவெனபுழிப்- பூண்டவதரித்து - என்பது அவாய்நிலை, பெயர்பூண்டல்-அவதரித்தவுருவின்மேற்றுதலால் வருவித் துரைக்கப்பட்டது. இது முற்றும்பயனிலையுமாக முடிப்பின் யாற்றுநீர்ப்பொருள்கோள்-எழுவாயும் பயனிலையுமாக முடிப்பின் ஏற்புழியெடுத்துக்கூட்டுமொழிமாற்றுப்பொருள்கோள், அணி நற்குறிப்பேற்றவேதுவணி, இனியிவ்விரண்டு பெயர்க்குமர்த்ததாற்பரிய சம்பந்தங்களெவ்வாறெனின், பச்சையப்பனென்புழி - பச்சையென்பது ஓர்பரிமளப்பூண்டு-அப்பமென்பதோர் சிற்றுண்டி- ஆதலாலிப்பெயரிடைநின்றபச்சையில் வாசனையும் ஆங்குநின்ற அப்பத்திலினிப்புமின்மையையுணர்ந்த மால் அவதரித்து அவ்விரண்டையுந்தந்து அக்காரணப்பெயரோபெயராகப் பூண்டான். எங்ஙனந்தந்து-எவ்வாறுபூண்டானெனின், அவ்வப்பத்திற்குச்சிறிவையும் அப்பச்சைக்கு வாசத்தையுந்தந்து சிறிவாசனெனப்பெயர்பூண்டானென்

௩. இனியிதுதற்குறிப்பேற்றவேதுவணியாயி னுந் தன்மையணியெனக்கோடலே பொருத் தமுடைத்தெதங்ஙீ.௩. என்னெனின், எவ்வகைப் பொருளும்மெய்வகைவிளக்குஞ் சொன்முறை தொடுப்பதுதன்மையாகும் - என்றாராகலின் இப்பச்சையப்பவள்ளலென்போன் ஸ்ரீநிவாஸ வள்ளலுதவியைப்பெறுதகாலத்தில் அப்பெ யர் யாவர்க்குமினியாதிருந்ததும் யாவருமறி யாதிருந்ததும் உண்மையாதலாலும்பெற்றபி ன்பு யாவர்க்கு மினித்ததும் யாவரு மறிந்து கொண்டாடப்பரிமளித்ததும் உண்மையாத லாலுமெனக்காண்க - ஸ்ரீநிவாசவள்ளலுதவியே சிறந்ததென்பதுகருத்து............... (௩)

நீர்முறையினெவ்வுயிர்க்கு நேர்ந்துதவிசெ ய்கையினும்-பேர்முறையும் பச்சையப்பனைப் பெற்ற - சீர்முறையிற், பச்சையப்பனமெ லிந்தாரீபங்கயத்தோன்காவலனாய் - மிஞ்சின னேகினிமோவிடம்..... .. ..*

(இ-ள்.) நீர்முறையின்- நீர்போலவும்-கிரட் டித்த அட்டமென்னீறமுறைட்பெயருடையோ ன்போலவும்,முறை-என்றது ஆகுபெயர். எவ் வுயிர்க்கும்-எல்லாவுயிர்களுக்கும், நேர்ந்து-

உடன்பட்டு, உதவிசெய்கையினால் - கைம்மா
றுவேண்டாது உதவிசெய்யுங் கட்பாட்டினா
லே, பேர்முறையும்பச்சையப்பனுப் பெற்றா
ன் - பொருண்முறையிற் பச்சையப்பனானதன்
றிப்பெயர்முறையும் அங்ஙனமாகவே பெற்றா
ன்; பச்சையப்பனென்பதி ஆகவென்னுஞ்
செயவெனச்சத் திறந் தேற்றேகாரமுங் கு
றைந்துநின்றன, உம்மையிறந்தது, சஷ்டி நின்ற
து, முறை - ஒழுங்கு, (அற்றையின்) நீர்பச்சைய
ப்பாகிக்கண்கூடாக வெவ்வுயிர்க்கு முதவுகை
போலச்சிருட்டித்தோன் பச்சையப்பனாகிலு
ம் உதவியதியாதெனின், அங்ஙனமன்று, இவ்
வுயிர்களையெல்லா நாஞ்சிருட்டித்தலினாலே
நமக்குவரும்பயன் யாதென வப்பயனை விரு
ம்பாது சிருட்டித்தலே பொருவில்கட்பா
டாதலா லிப்பச்சையப்பனாகியவள்ளலுங் கை
ம்மாறுதவியையும் பயனையும் விரும்பாமலே
யுதவிசெய்கையா லொப்புடைப்பொருளாயி
னானெனக்காண்க. நீரினையுமிவ்வாறேயொப்
புடைப்பொருளாக்குக. கைம்மாறுவேண்டா
கட்பாடுமாரிமாட்டென்னாற்றுங்கொல்லோ
வுலகு, எனவிங்ஙனங் கூறுதலுங்காண்க. கட்
பாடு - கொடை; கருதன்மூவாறுபெருங்கொடை

கூட்டமொருவென்பதூஉ நிகண்டு, ஓர்முறை
யின் (இங்ஙன மொட்டுடைப்பொருளாயினு
ம்)மற்றொரொழுங்கினுமேல, காவலனாய்-பின்
புகடைபோக்காததற்குச் சத்துருவயில்லாதவ
னாகி;பங்கயத்தோன்-அப்பிரமனானவன், பஞ்
சையப்பனாமெலிந்தான் - எளிமையப்பனாக
மெலிந்துபோனான், இவனே கடைபோகக்கா
த்துப்பச்சையப்பனாகவலிந்தான்,என்பதருத்
தாபத்தி) அவன்மெலிந்ததன்றி யவன்பெய
ரும்மெலித்தல் விகாரமேற்று நிற்றல்காண்க.
காவலனாய்ப்பங்கயத்தோன் பஞ்சையப்பனா
மெலிந்தானெனக்கூட்டுக, நீரோ-நீரோவெ
ளின், ஓகாரம்-வினா;மிஞ்சின்-மிகினும், அஃ
கின்-குறையினும்;விடம்-நஞ்சாகும்,எரு-இ
தனிடையென்னும்மைகளுமாக்கச்சொல்லு
ந்தொக்குநின்றன, இதனாலே இவனெப்போ
தும் நடுநிலையாகவே நின்று எல்லாவுயிர்களை
யுங்காத்தோம்பி யமுதம்போற்சிறந்தானென்
பதும்-நீரமுதமெனப்பெயர்பெற்றும் பொ
ருளாலுஞ் சொல்லாலும் விடமாயிற்றென்ப
தும்கொளக்கிடந்தமைகாண்க, இது எதுவுரு
ப்பாகக்கூற்றினாலேவேற்றுமைபட நின்றவே
ற்றுமையென்னுமணி-என்னை - கூற்றினுங்கு

நிப்பினுமொப்புடையிருபொருள் - வேற்று மைபடவரின்வேற்றுமையதுவே- என்பதிலக் கணமாதலின், ஏதுவணியும் நிரனிறையுங்கல ந்தலாற்சங்கிரணமெனினுமமையும்- இது- நீர் முறையினெனநிறுத்தவாறேகூறுது முறைபி றழக் கூறுதலா லெதிர்நிர னிறைப்பொருள் கோள். இதன்கருத்தும்விளங்கிக்கிடந்தது (சு)

கரிபரிதேராளுடையாய் காமருவுகையோ ய்- பொருவில்புகழ்ப்பச்சையப்பபூப - தரிய லரூர், சீர்நாலுலகுமறந்தேச நலமின்பிகழ் தோர்- சேரலரைக்கையரைத்தேவை. ... *

(இ-ள்.) கரிபரிதேராளுடையாய்-யானைமு தலியநால்வகையங்கங்களைப் முடைத்தாயிரு க்கின்றசேனையையுடையவனே, காமருவுகை யோய்-ஐவகைத்தேவதருக்களும் நட்புக்கொ ள நெருங்கிச்சாரா நின்றகைகளையுடையவனே, காவென்றறிறனுங் கைக்குவிசேடணமாதலா லும் ஐந்தென்பதுந்தேவதருக்களென்பதும் மருவலென்றதற் சிநேகிக்கக்கிட்டுதலென்ப தும்பெறப்பட்டன; அவையிந்திரனுணைவழி நிற்பதாதலா லிவை தடைவிடையின்றிக்கொ டுப்பதில் விசித்திரப் பண்புடைமையின் நட்

புக்கொளவிரும்புமென்பதாம், கா - சோலை, பொருவில்புகழ்ப் பச்சையப்பப - ஒப்பில்லாதபுகழுருவாகியபச்சையப்பனென்றுபெயர்பெயரினை யுடையவனாகிய வள்ளல்கட்கெல்லாமிறைவனே, இவன் இப்பொழுது பூதவுடம்பொடுகூடியிராது புகழுடம்பொடுகூடியிருத்தலாலே புகழுருவாகியபச்சையப்பனெனல்வேண்டிற்று - இவனிக்ஙனமிருந்து தம்புகழுடம்பை வாமனுவதாரங்கொண்ட விண்டுவைப்போலே மேன்மேலும் வளர்த்துக்கொண்டேவருதலாலொப்பில்புகழுருவெனல்வேண்டிற்று, விண்டுவைப்போலென வுவமைகாட்டியொப்பில்புகழென்றதுமலைவாமெனின் - அன்றென்க. அவர் பூதவுடம்பை வளர்த்தலால் பொருவில்புகழ்ப் பச்சையப்ப பூப வெனப் பாடமோதி, வள்ளல்கட்கிறைவனென்றுதன்னெனின், இவன்முன்போலப் பூமியைப்பாலித்தலின்றி யிப்பொழுது புகழையேபாலித்தலாலும் - கேளாதுங்கேட்டும்புகழ்ந்துங்கொடுத்துப் புகழ்படைத்த அம்மூவகைவள்ளல்களும் பூதவுடம்பினராயகாலத்தன்றி யிவன்போலப்புகழுடம்பினராயகாலத்துங் கொடுத்ததின்மையாலு மிவனவ்வள்ளன்மை அவ்வ

னீராசிகளுடையவள் ஆண்மைகளையெல்லாங்கேட் டுபடித்தலா லுமென்க, இனியிதனுள்-பச்சைய ப்புயபிஃ்ற இயற்பெயரொழிய மற்றைய வெல்லாம் மூன்லிலேயேவல்வினைச்சொற்களா யுநிற்றலால் இவிவருஞ்செய்ப்பபொருள்கட் கு அவற்றைந்திரனிலைமையாகவேயனிலையாக்கி முடித்துக்கொள்க எங்ஙனமெனின், சரியலரு ர்-சத்துருக்களுடைய நாட்டை, எரி-சுட்டெரித் துத்தீத்துவிடு; சீர்-மேன்மேற்புகழை, பரி-தாங் கு, நூல்-அனைய நீதிமுதலியபல நூல்களையும், தேர்-ஆராய்ந்துணர், உலகு-மூன்றுலகத்தை யும்; ஆள்-அரசாட்சிசெய், மறம்-பாவத்தை, உடை-நின்றெட்டியில்லாமற்சிதை, தேசம்- நீயாள்கின்றதேசவழக்குகளை நன்றாக ஆராய் ச்சிசெய்து நடிவுரை, தேசம்- ஆகுபெயர், ஆ கெண்பது காரியத்தோன்றநின்றது, நலம்- நன்மையையுடைய தருமங்களையெல்லாம், நி லைநிற்கை யாகுபெயராய்நின்றது, அதுபாவம் பாவம்பின்னையாதலாற் பன்மைப்பொருளு ரைக்கப்பட்டது, கா-காத்திரட்சி, இன்பு-சுகத் தை, மருவு-தழுவு, இகழ்-இகழ்தலை, கை-கைத் துவிடு, தோம்-குற்றத்தை, ஒழி-ஒழித்திரு, சே கலை-பகைவரை, பொருது-பெற்றுக்கொண்டுதாக்

கு, தாக்குதல்-போர்புரிதல், தரியலருரைக்கரி யெனமேற்கூறி யீங்குச்சேரலரைப் பொரு வென்றல். கூறிய தகூறலன்றோ வெனின் - அன் றெனக. சேரலரைப் பொருதவரையுஞ் சுட் டெரியெனவேறு பொருள்விளைத்தலால், கை யரா - திருடரை, வில் - தேசாந்தரங்களிற்செ லுத்திவிற்றவிடு; இங்ஙனஞ்செய்வதோரரைய நீறுமெனக்காண்க. தேவை-கடவுளை, புகழ் - பணிந்து துதிசெய்-எ-று, பணிந்தென்பதவா ய்நிலை, இங்ஙனங்கூறிய-ஒழுக்கம்-வழக்கு-தண் டம்-என்கின்றமூவகை நீதிகளிலும் மறந்துஞ் சோர்வுறாரா திருத்தற்பொருட்டுக் கடவுள்வ ணக்கம்பிற்கூறப்பட்டது, இதுபின்னது நிறு த்தலென்னும் உத்தி-முற்கூறவேண்டியதைப் பிற்கூறுதலால். புகழுடம்பினருகிய பச்சை யட்பகள்ளலேநாக்கி யிங்ஙனங்கூறுத லுலக மலைவாமெனின்-புலவர்பாடும் புகழுடையோ ர்விசும்பின் - வலவனேவாவானவூர்தி - யெய் துபவென்பதன்செய்வினைமுடித்தே, எனவும் நில்லைநீள்புகழாற்றிற்புலவரைப் - போற்று தடித்தேழுலகு-எனவும் கூறுதலால்- அவன் தேவுடனேர்க்கூடித் தேவகதிபெற்றுநின்று னெனற்கு ஐயமின்றுதலாலும், அருவுருவாய

கடவுளை நோக்கி யிங்ஙனங்கூறுதன் மரபாதலாலும் இதிற்கூறிய முன்னிலையேவலொருமைவினைச்சொற்கள் பதின்மூன்றிற்கு மெழுர்காலமேயாதலாலும் இங்ஙனமாகிய நீபுதவுடம்போடுகூடிக்கண்கூடாக இங்ஙனமும் புரிவாயாயினது நனிதவநன்றென்னும் விருப்பத்தைக்கொண்டுகூறியது கவியிருதயமாதலாலுமென்றென்க. இச்செய்யுள் நிரனிறைப்பொருள்கோளு மவ்வணியும்பட நின்றது, காதுசேர்தாழ்குழையாய் கல்வித்துறைச்சேர்ப்பயோதுசேர்தார்மார்பபோர்ச்செழிய-நீதியாள்; மண்ணமிழ்தமங்கையர்தோண் மாற்றலாயேற்றார்க்கு-நண்ணியவாயபொருள்-எனப் பின்புசங்கப்புலவரிலொருவராகச்சேரவிருந்த குடவுழுநதுக்கவிராயர்கூறியதுங்காண்க. பிறவிலக்கணங்களுங்கண்டுகொள்க.....(ரு)

சீர்வாழிபச்சையப்பன் றெய்வத்திறல்வாழி
யூர்வாழி தார்வாழியோங்குபுகழ்-நீர்வாழி, ய
ன்னவன்செய்நல்லறமுமாக்க பெரும்பொலிக்கு
மன்னோர்முன்பின்வாழிவாழி.... ... ...*

இதன்பொழிப்பு.

பச்சையப்பவள்ளலது செல்வமுமவனது

தெய்வப்பண்டு மவனூரு மவனதுவெற்றிமாலையும் நாளுக்குநாளுயராநின்ற அவனதுபுகழினையும் அவன்செய்தருமங்களுமற்றத் தருமங்களையும் வளரவினவாகவென்றி மேற்பட்டு நாடோறும்விருத்தியாகும்படி யவ்விருத்தியடைகூடப் பாலனம்பண்ணுகின்ற வராசருமவர்க்குமுன்னவராகிய பிராமணப்பிரபுகளும் பின்னவராகிய வைசியப்பிரபுகளு மற்றப்பிரபுகளும் நீடித்து வாழ்கவென்பதாம்- நல்லறமும் - என்புழியவ்வும்மையெண்ணும்மையாயுமெதிரதுதழீஇயுநின்றது - அதனால் அவன்தருமங்களும்- அவன்தருமங்களையுமவனதுபுகழையுமாக்கமொடு பாலிக்குமன்னருமெனப் பொருளுரைக்க.

பஞ்சரத்நமாலிகையின் காண்டிகையுரை

முற்றிற்று.